# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,603 — JANUARY 23, 1914.


## TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Irrigation Rules for the District of Mullaittivu, Northern Province.]

பெரிய பிரித்தானியாவும் ஐயர்லாந்தும்சேர்ந்த ஐக்கிய இராச்சியத்துக்கும் கடல்களுக்கப்பாலுள்ள ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயகர் ஐந்தாவது ஜோர்ஜ் அவர்கள் நாமத்தினாலே:

மகாகௌரவம் பொருந்திய பாத் என்னும் வரிசையின் நயிற்கம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும், இலங்கைத்தீவுக்கும் அதனைச்சார்ந்துள்ள நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாபதியுமாகிய உத்தமனார்
சேர் றொபேட் சாமேர்ஸ் அவர்களாற் செய்யப்படும்

### பிரசித்தம்.

றொபேட் சாமேர்ஸ்,

வடமாகாணம் முல்லைத்தீவு டிஸ்திறிக்கிலுள்ள நெல்விளை நிலங்களைத் தண்ணீர் பாய்ச்சி செய்கைபண்ணும் விஷயத்தில் முல்லைத்தீவு டிஸ்திறிக்கு உதவி ஏசன்றுத்துரையவர்கள், 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 11 ம் 54 ம் பிரிவுகளின் பிரகாரம் தமக்களிக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டுண்டாக்கப்பட்ட இதன் கீழ் கண்டிருக்கு மட்டவணையிற் காட்டிய பிரமாணங்களை மேற்படி உதவி ஏசன்றுத்துரையவர்கள் மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவின்படி ஏற்றுக்கொள்ள அல்லது தள்ளிவிட எமக்கு அனுப்பிவைக்கப்பட்டபடியால்:

மேற்படி தேசாதிபதியவர்களாகிய நாம் மேற்காட்டிய கட்டளைச்சட்டத்தின் 20 ம் பிரிவின்படி நம்மீது வைக்கப்பட்டுள்ள தத்துவங்களைச்செலுத்தி, அதிகார மந்திரசபையாரது ஆலோசனையுடன் மேற்படி பிரமாணங்களை நாம் சம்மதித்து ஏற்றுக்கொண்டோமென்றும், குறித்த பிரமாணங்கள் வடமாகாணம் முல்லைத்தீவு டிஸ்திறிக்குக்கு மாத்திரம் விளம்பரத் திகதி தொடக்கம் அதிகாரத்துக்கு வருமென்றும் இத்தா லறிவிக்கிறோமென்பதை நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத்தொளாயிரத்துப் பதினாலாம் ஆண்டு ஜெனவரிமாதம் பதினேலாந் தேதியாகிய இன்று இலங்கைத்தீவில் கொழும்பிலே கொக்கப்பட்டது.

உத்தமனார் அவர்கள் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ்,
இராசாங்க லிகிதர்.

தேவன் இராசாவைக் காத்தருள்க.

---

அட்டவணை.

1. ஒரு குளத்தின் கீழுள்ள மற்றும் வெளிகளில் இடைப்போக வேளாண்மை தொடங்கிய பின் அக்குளத்தின் கீழ் கால்போக வேளாண்மைக்கு விரைப்புப் பிந்திய ஒரு பங்குக்குத் தண்ணீர் தேவையாக விருந்தால், அக்காணிக்கு இடைப்போக வேளாண்மையில் பங்கு கிடைககமாட்டாது.

அவ்வண்ணமாகவே விரைப்புப் பிந்திய இடைப்போக வேளாண்மைக்குத் தண்ணீர் தேவையான பங்குக்குச் சிறுபோகத்தில் பங்கு கிடைக்கமாட்டாது.

நீர்ப்பாய்ச்சல் கூட்டத்தில் தீர்மானித்த பிரகாரம், சொல்லிய திகதிகளிலும் சொல்லப்பட்ட வயசுள்ள நெல்லுகளும் விரைக்கப்பட்ட காணிகளுக்கு இப்பிரமாணங்கள் அமையா.

2. ஒரு குளத்தின் கீழ்உள்ள தண்ணீர் பாயக்கூடியதாகச் செவ்வையாகத் திருத்தப்படாத காணிகளுக்கும் இடைப்போகம் சிறுபோகங்களில் பங்கு கொடுக்கப்படமாட்டாது.

3. குழிகள் கட்டிகளெல்லாம் ஒப்புரவானவும் சமனானவுமான நிலத்தில் வெட்டப்பட வேண்டும். யாதொரு பங்காளன் அல்லது அவனுக்காக வேலைசெய்யு மின்னொருவன், தான்செய்ய வேண்டிய மண்வேலைத்தொகையில் தலைமைக்காறரை அல்லது குள உத்தியோகஸ்தரை ஏமாற்றும் நோக்கத்துடன் பழங்குழிகளைத் திருத்தி அல்லது மேடும் பள்ளமுமுள்ள நிலங்களில் குழிகள் கட்டிகளை வெட்டினால், அது குற்றமாகக் கவனிக்கப்பட்டு வழக்குத் தொடரப்படும்.

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

**No. 1,360, E. P.**—1914 ம் ஆண்டு மாசிமாதம் 27 ந் திகதி, வெள்ளிக்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு, கிழக்கு மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்கள், தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருககும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. | ரூ. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 4,326. மண்முனைப்பற்று வடபகுதி. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 828 | விடத்தல்முனை .. | பே. வல்லியான் .. | பறட்டைக்காடும் மணலும் | 3 | 0 | 27 | .. 15 |
| | | படம் 4,456. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1369 | முறுவோடை .. | க. ஆறுமுகம் .. | புகையிலைப்பூமி | 1 | 1 | 34 | . 25 |
| 1370 | ஷை .. | பொதுவிற்பனவு .. | புகையிலைச்செய்கைக்கேற்ற காடு .. | 1 | 0 | 37 | .. 15 |
| | | படம் 4,552. போரதீவுப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1850 | மண்டூர் .. | க. கந்தன் .. | காடு .. | 1 | 1 | 12 | .. 15 |
| 1851 | ஷை .. | ஷை ... | காடு .. | 0 | 1 | 15 | .. 15 |
| | | படம் 4,492. கரைவாகுப்பற்று. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 1560 | சாய்ந்தமருது 3 ம் குறிச்சி .. | க. மீராலெவ்வை .. | தென்னந்தோட்டம் .. | 0 | 0 | 13 | .. 400 |
| 1561 | ஷை .. | ஆ. அகமதுலெவ்வை .. | ஷை .. | 0 | 0 | 13 | .. 400 |
| | | படம் 4,377. விந்தனைப்பற்று வடபகுதி. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 995 | தம்பிச்சை .. | பொதுவிற்பனவு .. | தளவாய் .. | 0 | 3 | 18 | .. 15 |
| | | படம் 4,397. பாணகைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1086 | பொத்துவில் .. | இ. ஆதங்கண்டு .. | காடு .. | 1 | 0 | 36 | .. 15 |
| | | படம் 4,510. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1654 | ஷை .. | க. கந்தையா .. | தென்னைக்கேற்றகாடு .. | 1 | 0 | 0 | .. 16 |
| | | படம் 4,523. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1721 | ஷை .. | அ. இஸ்மாயில் .. | தென்னைக்கேற்றகாடு .. | 2 | 0 | 11 | .. 15 |
| 1722 | ஷை .. | பொதுவிற்பனவு .. | ஷை .. | 1 | 0 | 21 | .. 15 |
| | | படம் 4,557. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1890 | ஷை .. | த. நாகாத்தை .. | வெட்டைப்பூமி .. | 0 | 1 | 34 | .. 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்தீசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் விஞவி அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1914 ம் ஹூ ஜனவரிமீ 21 ந் உ.

ஆர். ஈ. ஸ்டப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

[Continuation of Land Sale at Assistant Government Agent's Office at Chilaw, if necessary, on February 14, 1914.]

1913 ம் ஆண்டு மார்கழிமீ 31 ந் திகதி, 6,600 ம் நொம்பர் "கெசற் பத்திரிகை" யின் பிரகாரம் 1914 ம் ஆண்டு மாசிமீ 13 ந் திகதி, வெள்ளிக்கிழமை 1 மணிக்கு சலாபத்துக் கச்சேரியில் விற்பனவுக்கு நியமிக்கப்பட்ட முடிக்குரிய காணிகள் தேள்வையென்றுகண்டால் அடுத்த நாளிலும் விற்பனவாகும்.

புத்தளம் கச்சேரி,
1914 ம் ஆண்டு தைமீ 16 ந் உ.

ஜோன் ஸ்கொட்,
அரசாட்சி உப ஏசண்டர்.

---

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Matale Town.]

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்தளை தவால்கந்தோரை பெருப்பிக்குகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 6,443. குறிச்சி—மாத்தளை நகரில்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| J 48 | கரந்தககமுளவத்தை .. | சில தென்னமரங்கள் உள்ள தோட்டமும் வீடும் .. | எவ். ஏ. பிறின்ஸ்துரை அவர்கள் .. | 0 | 1 | 9·21 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஷைப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1914 ம் ஹூ மார்ச்சுமீ 5 ந் தேதியிலன்று பகல் 1 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின்தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1914 ம் ஹூ ஜனவரிமீ 16 ந் உ.

டபிள்யு. ரீ. சதேர்ண்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

[Kalmunai, Batticaloa District.]

1876 ம் ஆல-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்முனையில் ஒரு ஸ்ரேருரும் நீர்ப்பாய்ச்சல்வேலை கந்தோரும் கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4,535. குறிச்சி—கல்முனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| L 16 | பரிதசேனை .. | தென்னமரத்திற்கேற்ற வெளியாக்கப்பட்ட நிலம் .. | தா. பெரியதம்பி ... | 0 0 26·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1914 ம் ஆல மாசிமாசம் 21 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு மட்டக்களப்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு கச்சேரி,
1914 ம் ஆல தைமீ 14 ந் உ.

டீ. குணதிலக்க,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Puliyantivu, Batticaloa District.]

1876 ம் ஆல-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்புக்கு தண்ணீர் கொடுப்பதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4,630. குறிச்சி—புளியந்தீவு.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| R 19 | சின்னச்செட்டியார் வளவு .. | குடியிருக்கத்தக்க இருமண்பூமி .. | கார்த்திகேசு வேலுப்பிள்ளை .. | 0 0 17·12 |
| S 19 | கதிராமர் கணக்கப்பிள்ளை வளவு .. | ஷை .. | இளையதம்பி தங்கம் .. | 0 0 24·25 |
| | பிரதம படத்து இலக்கம் 4,634. குறிச்சி—பாலமீன்மடு. | | | |
| T 19 | காத்துக்குடாமடுப்பூமி .. | தென்னம்பிள்ளை நடப்பட்ட மணற்பூமி .. | ஓ. ஸ்ருரேருயிஸ் ... | 0 1 11 |
| U 19 | ஷை .. | தென்னம்பிள்ளைப்பூமி | வயிரவியார் செல்லப்பா .. | 0 0 11·87 |
| V 19 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 2 9·25 |
| W 19 | ஷை .. | ஷை .. | ஆர். கே. சாய்வுமுகம்மது .. | 0 0 1·12 |
| X 19 | ஷை .. | ஷை .. | வயிரவியார் செல்லப்பா .. | 0 0 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1914 ம் ஆல மாசிமாசம் 21 ந் தேதியிலன்று 12 மணிக்கு மட்டுக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1914 ம் ஆல தைமீ 19 ந் உ.

ஜே. ஓ. கே. மேர்ற்றி,
அரசாட்சி ஏசண்டு.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களாக குறித்த விளம்பரங்கள்.

[Kurunegala Notice No. 5,115.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1914 ம் ஆல (ஜனவரி) தைமீ 23 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலைகாற்பற்றைச்சேர்ந்த மகாகல்பொட எகொடகோறளையில் கணேவத்த என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 14 பேட்ச விசாலமுடையதும் A 1052A ம் பிரதமபடத்தில் 2,036 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் வண எல (வெட்டுவாய்க்காலும் குளக்கட்டும்) என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-யாபத்காமியும் குசல்காமியும் உரித்தாடும் தலுபொதபுராண; கிழக்கு-பாழ்நிலக்கட்டளைச் சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட வணஎல, வெட்டுவாய்க்காலும் காணியும்); தெற்கு-முடியால் விற்கப்பட்ட கணேவெவ (குளம்), யாபத்காமியும் குசல்காமியும் உரித்தாடும் தலுபொதபுராண; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட வணேஎல (வெட்டுவாய்க்காலும் குளக்கட்டும்).

* இங்கிலிசின் நான்காம் பாகம் 51 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Kurunegala S. O. 10, 1914.]

---

[Kurunegala Notice No. 5,116.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1914 ம் ௵ (ஜனவரி) ௴ 23 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். ரி. ஆச்சிபோல்ட்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரி. ஆச்சிபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தம்பதேனிகாத்பத்தைச்சேர்ந்த உடுக்காக்கோறளை கிழக்கில் மாஆராச்சிமுல்ல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 442.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 2½ | மிதெல்லஎலவின் பகுதி (நீரோட்டம்) | 0 | 2 | 29 |

எல்லைகளாவன: வடக்கு-மிதெல்லஎல (கந்தேகெதரக் கிராம எல்லை, கிரிவாணப்பொலக் கிராம எல்லை); கிழக்கு-மிதெல்ல எலவின் பகுதி; தெற்கு-மிதெல்ல எலவின் பகுதி (கித்தாரபொல கிரிபண்டா உரித்தாடும் எடந்தகொற்றுவேகும்புற), மேற்படியாரும் மறுபேரு முரித்தாடும் பகாலகும்புற, முடியால் விற்கப்பட்ட எலகாவகேன, முடியால் உரித்தாடும் மலஎலகாவவத்த, கந்தேகெதரக் கிராம எல்லை, முடியால் உரித்தாடும் மலஎலகாவவத்த; மேற்கு-மலஎலவின் பகுதி.

II.—பிரதம படம் 442.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 7½ | மிதெல்லஎலவின் பகுதி (நீரோட்டம்) | 0 | 0 | 7·5 |
| 8½ | ஷை ( ஷை ) | 0 | 1 | 33 |
| | | 0 | 2 | 0·5 |

எல்லைகளாவன: வடக்கு-மிதெல்லஎலவின் பகுதி (கிரிவாணப்பொலக் கிராம எல்லை); கிழக்கு-மிதெல்லஎலவின் பகுதி, இடங்கப்பொலக் கிராம எல்லை; தெற்கு-முடியால் உரித்தாடும் தூவ (தீவு), கிரிவாணப்பொலவிலிருக்கும் யகபத்காமி உரித்தாடும் தகன்லகொற்றுவேகும்புற, செவந்தானே முதலிகாமியும் மறுபேரு முரித்தாடும் கல்வணகாவகும்புற, கித்தாரபொல கிரிபண்டாவும் மறுபேரு முரித்தாடும் எடந்தகணத்திய, மேற்படியார் உரித்தாடும் பகாலகும்புறவும் பிறவும்; மேற்கு-மிதெல்லஎலவின் பகுதி (கிரிவாணப்பொலக் கிராம எல்லை).

III.—பிரதம படம் 442.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 9½ | தூவ (தீவு) | 0 | 0 | 8 |
| 9⅓ | மிதெல்லஎலவின் பகுதி (நீரோட்டம்) | 0 | 0 | 32 |
| | | 0 | 1 | 0 |

எல்லைகளாவன: வடக்கு-எல, இடங்கப்பொலக் கிராம எல்லை; கிழக்கு-செவெந்தானக் கிராம எல்லை; தெற்கு-எலவின் பகுதி (நகவெலக் கிராம எல்லை); மேற்கு-முடியால் விற்கப்பட்ட மெதவத்தகேன, முடியால் விற்கப்பட்ட மெதவத்த, முடியால் விற்கப்பட்ட கமற்றபில்லெவ, முடியால் விற்கப்பட்ட மெதவத்த, முடியால் விற்கப்பட்ட தகனகொற்றுவபில்லாவ.

IV.—பிரதம படம் 442.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 11C | கெற்றகலகாமுலகேன அல்லது மெதவத்த | 0 | 1 | 9·6 |
| 11K | மெதவத்தகேன | 0 | 0 | 25 |
| 11L | ககற்றகாமுலகேன அல்லது மெதவத்தகேன | 0 | 0 | 37 |
| 12A | மெதவத்த | 0 | 1 | 20 |
| | | 1 | 0 | 11·6 |

*இங்கிலிசின் நான்காம் பாகம் 52—54 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட கெற்றகலகாமுலகேன அல்லது மெதவத்த, முடியால் விற்கப்பட்ட கெற்றகலகாமுலகேன; கிழக்கு-றனவீரஆச்சிலாகே உக்குசிங்கோவும் மறுபேரு முரித்தாடும் கெற்றகலகாமுலகேன; தெற்கு-நகவெலக் கிராம எல்லை; மேற்கு-முடியால் விற்கப்பட்ட மெதவத்த, முடியால் விற்கப்பட்ட கெற்றகலகாமுலகேன, கனுஆச்சிலாகே பெற்றன்காமியும் இன்னொருவரு முரித்தாடும் மீகாமுலவத்த, ஜலாத்முதியான்செலாகே கபுறுகாமியும் இன்னொருவரு முரித்தாடும் ககற்றகாமுலவத்த.

[Kurunegala S. O. 11, 1914.]

---

[Kurunegala Notice No. 5,117.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1914 ம் ஞூ (ஜனவரி) தைமீ 23 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ற்றன் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ற்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கட்டுகம்பொல காற்பத்தைச்சேர்ந்த மெதபத்துக்கோறளை மேற்கில் முகலான என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விபரித்தபடியே 5 ஏக்கர் விசாலமுடையதும் 312 ம் பிரதமபடத்தில் 370 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும், சாமானியமாய் கனென்கெற்றபிற்றியேபில்லெவ என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட கனென்கெற்றபிற்றியேபில்லெவ (289,617 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); கிழக்கு-ருஜகருணமுதியான்செலாகே கெருத்காமியும் மறுபேரு முரித்தாடும் கனென்கெற்றபிற்றிய, முடியால் விற்கப்பட்ட கனென்கெற்றபிற்றியேபில்லெவ (289,635 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); வலாலியத்த புஞ்சிரளவும் மறுபேரு முரித்தாடும் வலாலியத்த; தெற்கு-பரகாகொற்றுவ, சொகொந்திரள உரித்தாடும் பரகாகொற்றுவ, முடியால் விற்கப்பட்ட கெலலியத்தேபில்லெவ (291,671 ம் உரிமைப்படத்தில் காணும் காணி); மேற்கு-கல்எல, கெருத்பெருமமுதியான்செலாகே அப்புகாமியும் மறுபேரு முரித்தாடும் பகாலகபகனென்முல்ல, கெ. கிரிபண்டா உரித்தாடும் கபகனமுல்லே இறவெல்ல.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 54 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Kurunegala S. O. 12, 1914.]

---

[Kurunegala Notice No. 5,118.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1914 ம் ஞூ (ஜனவரி) தைமீ 23 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலைகாற்பத்தைச்சேர்ந்த மகாகல்பொட எகொடகோறளையில் பொற்றுவில (கிழக்குப் பகுதி) என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 1,288.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கெப்கதகந்தமூகலான | 42 | 1 | 38 |
| 2 | வெளிநிலம் (வெட்டு வாய்க்காலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 22 |
| 3 | குளக்கட்டும் வெட்டுவாய்க்காலும் | 2 | 2 | 35 |
| 4 | துன்முல்லகேன | 0 | 0 | 38 |
| 5 | கெப்கதகந்தமுகலான | 0 | 1 | 2 |
| 6 | ஷை (காடும் வெட்டுவாய்க்காலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 18 |
| 7 | வெளிநிலம் (வெட்டுவாய்க்காலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 32 |
| 8 | காடும் வெளி நிலமும் | 0 | 1 | 1 |
| 9 | ஷை | 0 | 0 | 26 |
| | | 46 | 2 | 12 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-கன்னுவக் கிராம எல்லை; தெற்கு-பத்தாவக் கிராம எல்லை, நெலிகமக் கிராம எல்லை; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கந்தபொடகேன்யாய, கன்னுவக் கிராம எல்லை.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 55 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Kurunegala S. O. 13, 1914.]

[Election of District Committee Members, Puttalam.]

இத்தா லறிவிக்கிறதாவது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக்கட்டளைச்சட்டத்தின் 26 ம் பிரிவின்படி பர்கர்மார், 1914 ஆம் 1915 ம் ஆண்டுகளுக்கு புத்தளம் டிஸ்திறிக் கொம்மிற்றியின் கூட்டத்தார்களாக இந்த வுத்தியோகத்தைக் கேட்க நினைத்திருக்கிற யாவருந் தங்களெண்ணத்தைத் தெரிந்துகொள்ளுதலுக்குக் கடசியாகப் பத்து நாளைக்கு முன்னே வடமேல் மாகாணத்துக்குச்சேர்ந்த பிறவின்சியல் ரோட் கொம்மிட்டியின் சங்கத்தலைவனுக்கு எழுத்தினால் பயன்படும்படி இத்தால் கேட்கப்படுகுது. 1914 ம் ஆண்டு தைமாதம் 26 ந் திகதி 1·30 மணிக்கு புத்தளம் கச்சேரியில் தெரிந்துகொள்ளப்படுவார்கள்.

என். ஜே. லடிங்றன்,
சக்கிறத்தார்.

பிறவின்சியல் ரோட் கொம்மிற்றியில்,
1914 ம் ஆண்டு தைமீ 12 ந் வ.

---

[Supreme Court Criminal Sessions at Jaffna.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1914 ம் ஆண்டு மாசிமாதம் 16 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

ஏ. ஆரியகுட்டி,
பிஸ்காலுக்காக.

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்,
1914 ம் ஹூ தைமீ 14 ந் வ.

---

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக் குட்படாதவர்களின் அறிவித்தல்.

[C. A. Cumaranatunga.]

1907 ம் வருஷம் 1 ம் நம்பர் சட்டத்தின் 1 B செடுலின் இரண்டாவது பிரமாணத்தின்படி சல்பிட்டிக்கோறளையைச் சேர்ந்த பள்ளபத்துவிலுள்ள பெல்லந்தோட்டையிலிருக்கும் கவ்யாணரத்தின அரியதாச குமாரனத்துங்கவாகிய நான் மாத்தறை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் நொத்தாரிசாக வேலைசெய்ய என்னைச்சேர்த்து நாமத்தைப் பதிவுசெய்யும்படி மூன்று மாதத்தின் பின்னர் றிஜிஸ்டிறார் ஜனறலுக்கு விண்ணப்பம் செய்வேனென்பதை, இத்தால் அறிவிக்கின்றேன்.

சீ. ஏ. குமாரனத்துங்க.

பெல்லன்றோட்டே,
1913 ம் ஹூ நவம்பர்மீ 1 ந் வ.

[D. B. Jayasinghe.]

1907 ம் வருஷம் 1 ம் நம்பர் சட்டத்தின் 1 B செடுலின் இரண்டாவது பிரமாணத்தின்படி சல்பிட்டிக்கோறளையைச் சேர்ந்த பள்ளப்பத்துவிலுள்ள நிக்காப்பையிலிருக்கும் டொன் பஸ்தியான் ஜயசிங்கமாகிய நான் களுத்துறை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் நொத்தாரிசாக வேலைசெய்ய என்னைச்சேர்த்து நாமத்தை பதிவுசெய்யும்படி மூன்று மாசத்தின்பின்னர் றிசிற்றார் சௌறலுக்கு வி ணப்பம் செய்வேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

டி. பி. ஜயசிங்க.

நிக்காப்பை, 1913 ம் ஹூ நவம்பர்மீ 1 ந் வ.

---

[D. A. Gunesekera.]

கொழும்பு டிஸ்திறிக்கில் சல்பிற்றிக் கோறளையில் பன்ளம்பற்றைச்சேர்ந்த பெல்லந்தறகுடி டொன் ஏறன் குணசேகர ஆகிய நான் கொழும்பு டிஸ்திறிக் பகுதியில் சிங்களப் பாஷையில் வேலைபார்ப்பதற்கு என்னைப் பிரசித்த நொத்தாரிஸ் ஆக ஏற்றுப் பதிவுசெய்துகொள்ளும்படி மூன்று மாசத்தின் பிறகு றிஜிஸ்ரிறார் ஜெனறல்துரையவர்களிடங் கேட்டுக்கொள்ளப்போகிறேன் என்று இத்தால் அறிவிக்கிறேன்.

டி. ஏ. குணசேகர,

பெல்லந்தற,
1913 ம் ஹூ நவம்பர்மீ 3 ந் வ.

---

[N. J. de Zoysa.]

காலி டிஸ்திறிக்கைச்சேர்ந்த பனப்பிட்டியில் குடியிருக்கும் நிகமுனி ஜறணியல் அல்லது ஜயநேரிஸ் த செய்சா குணவர்தன ஆகிய நான் 1907 ம் ஹூ 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8ஷம் வகுப்பு B. சட்டத்தின் வீதம் இன்று துவக்கம் மூன்று மாதம் பிற்பட்டதின்பின் காலி டிஸ்திறிக்கில் சிங்களப்பாஷையினால் அலுவல்பார்க்கும் பிரசித்த நொத்தாரிஸ் ஒருவராக யேர்படுத்தும்படி ரிஜீஸ்றார் ஜனரல் அவர்களிடம் கேள்கும்படி கருதியிருப்பதை யித்தாலறிவிக்கிறேன்.

என். ஜே. டீ. சொய்சா.

1914 ம் ஹூ ஜனவரிமீ 1 ந் வ.

---

[B. Sedris.]

கொழும்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த சியனகோறளை கங்கபடபத்துவா மயிலவலான புத்பிட்டியலேகமலாகே ஸேதிறிஸ் ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் கட்டளைச்சட்டத்தின் 1 B என்னும் செடுலின் றூல் 2 படி கேகல்ல டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் ஆக வேலை பார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாசத்தின்பின் பதிவுகந்தோர்த்தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

பி. ஸேதிறிஸ்.

மயிலவலான,
1914 ம் ஆண்டு ஜனவரிமீ 15 வ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.